**செய்தி வெளியீடு எண் : 018** **நாள் : 03.01.2023**

# செய்தி வெளியீடு

## சென்னை சென்ட்ரல் புறநகர் ரயில் நிலையத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் தகவல்கள் குறித்த விளம்பர ரயிலினை மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் அவர்கள் பார்வையிட்டார்

தமிழ் நாடு அரசு ஆணை எண்.30 நாள்.09.03.2022 அன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மூலமாக வெளியிடப்பட்டது இதன் மூலம் பல்வேறு தகவல் தொடர்பு செயல்பாடுகள் மக்கள் இயக்கம் மூலம் சமுதாயத்தில் பழக்க வழக்க மாற்றத்தை கொண்டுவருவதாகும் இதன் அடிப்படையில் மின்சார இரயில் பெட்டிகளில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதர தகவல்களை விளம்பரப்படுத்துவது ஒரு நடவடிக்கையாகும்

இது சம்மந்தமாக ஊட்டச்சத்து மற்றும் சுகாதார செய்திகளை விளம்பரம் செய்ய, தென்னக இரயில் நிர்வாகத்திடம் 9 பெட்டிகள் கொண்ட இரயில் தொடரை ஒரு வருடத்திற்கு வாடகை எடுத்து அதற்காக ரூ.25 இலட்சம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் இரயில் பெட்டிகளில் ஒட்ட வேண்டிய ஒட்டிகள் (Sticker) தயார் செய்யவும் அதனை சார்ந்த செலவினங்களுக்கு ரூ6.91 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இரயில் பெட்டிகளில் விளம்பரம் செய்யவேண்டி முக்கியமாக எடுத்துக்கொள்ளப்பட்ட கருத்துக்கள் 1) குழந்தையின் முதல் 1000 நாட்கள் மற்றும் 2) இரத்த சோகையை தடுத்தல் இந்த இரு கருத்துகள் சார்ந்த கீழ்கண்ட தகவல்கள் இதில் இடம் பெற்றுள்ளது:

குழந்தையின் முதல் 1000 நாட்கள்:

- குழந்தையின் முதல் 1000 நாட்களின் முக்கிய பிரிவுகள் (கர்ப்பகாலம் 270 நாட்கள், பிரத்தியேக தாய்ப்பால் மட்டும் 180 நாட்கள் மற்றும் தாய்ப்பாலுடன் இணை உணவு அளித்தல் 550 நாட்கள்)
- குழந்தை வளர்ச்சி கண்காணிப்பு
- இலக்கு பயனாளிகளை அங்கன்வாடி சேவைக்கு அணுக ஊக்கப்படுத்துதல்.

இரத்த சோகை தடுப்பு:

- இரும்புச்சத்து நிறைந்த சமச்சீர் ஊட்டச்சத்து உணவு தகவல்கள்
- தன்சுத்தம் பேணுதல் பற்றிய தகவல்

- இரும்புச்சத்து மாத்திரை பற்றிய தகவல்கள்
- குடற்புழு நீக்கம்
- கை கழுவுதல்
- வளரிளம் பெண்களுக்கான ஊட்டச்சத்து

இந்த விளம்பரத்தின் மூலம் குழந்தையின் முதல் 1000 நாட்களின் முக்கியத்துவத்தினை பொது மக்கள் மற்றும் பயனாளிகளுக்கு எடுத்துச் சொல்லுதல். இதனால் குழந்தையின் வளர்ச்சி மற்றும் எதிர்காலம் சிறப்பாக அமைவதை பற்றியும், பொதுமக்களிடையே இரும்புச்சத்து நிறைந்த சமச்சீர் உணவு மற்றும் தன்சுத்தம் காப்பதினால் இரத்த சோகையில்லாமலும் ஆரோக்கியமாகவும் வாழலாம் என்ற கருத்தினை புரிய வைத்தல்.

இந்த தகவல் விளம்பர இரயில் வண்டியானது ஒரு வருட காலத்திற்கு ஆவடி, அரக்கோணம், கும்மிடிபூண்டி, மற்றும் வேளச்சேரி மார்க்கத்தில் இயங்கும்.

இந்த ஊட்டச்சத்து மற்றும் சுகாதார தகவல் இரயிலினை திரு.ஷன்சோன்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப,. முதன்மை செயலர், சமூக நலன் மற்றும் பெண்கள் உரிமைத்துறை, திருமதி.வே.அமுதவல்லி, இ.ஆ.ப, இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் துறை மற்றும் துறை அலுவலர்கள் 03.01.2023 அன்று சென்னை புறநகர் இரயில் நிலைய நிகழ்வில் முறையாக பார்வையிட்டு பொதுமக்களுக்கு ஊட்டச்சத்து குறித்த பிரசுரங்கள் விநியோகித்தும். ஊட்டச்சத்து மற்றும் சுகாதார தகவல் இரயில் இயக்கப்பட்டது.

இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in